**அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழு**

**கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு**

**இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் I உத்தியோகத்தர்களை கல்விப் பணிப்பாளர்/ ஆணையாளர் பதவிகளுக்கு நியமித்தல் - 2025**

கீழ்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமைகளைக் கொண்டிருக்கும் உத்தியோகத்தர்களிடமிருந்து நாடளாவிய ரீதியில் விண்ணப்பப் படிவங்கள் கோரப்படுகின்றன.

| பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| கல்வி அமைச்சின் கல்விப் பணிப்பாளர் | 13 |
| இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் | 02 |
| மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை | 15 |

1. **தகைமைகள்**

   I. இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் I உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல்.

   II. அனைத்து தகைமைகளும் விண்ணப்ப இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்டனவாக இருத்தல்

2. **விண்ணப்பிக்க வேண்டிய விதம்**

   I. இத்துடன் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய A4 அளவுத் தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை முறையாக பூரணப்படுத்தி, 2025.07.11 ம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் **உதவிச் செயலாளர், கல்விச் சேவைகள் தாபனக் கிளை, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல"** எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாக அனுப்பிவைக்க வேண்டும். விண்ணப்பப் படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "கல்விப் பணிப்பாளர்/ ஆணையாளர் பதவிக்கு விண்ணப்பித்தல்" என்பதாக குறிப்பிட்டிருத்தல் வேண்டும். தாமதமாக கிடைக்கப் பெறும் விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

   II. தங்களது அண்மையில் எடுக்கப்பட்ட 2x2½ அங்குல வர்ணப் புகைப்படம் ஒன்றை விண்ணப்பப் படிவத்தின் வலது பக்க மேல் மூலையில் ஒட்டி அனுப்ப வேண்டும்.

3. **செயன்முறை**

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நியமிக்கப்படும் மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட நேர்முகப் பரீட்சை சபையொன்றினூடாக இத்துடன் தரப்பட்டுள்ள புள்ளி வழங்கல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளுக்கமைய வழங்கப்படும் புள்ளிகளின் அடிப்படையில் 2025.08.31 ம் திகதி வரை வெற்றிடமாகும் பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை நியமித்தலானது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவின் அனுமதியின் படி சேவையின் தேவையின் அடிப்படையில் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு செயலாளரின் விருப்பிற்கமைய மேற்கொள்ளப்படும்.

CamScanner

4. உரிய கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையானது பத்தரமுல்ல, இசுருபாய, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சில் நடைபெறும். நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் திகதி, பின்னராக அறியத் தரப்படும். இப் பதவிகளுக்கு நியமித்தல் தொடர்பில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

5. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தலில் மொழி வசனங்களுக்கிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மைகள் காணப்படின், அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூலமான அறிவித்தல் சரியானது எனக் கருதப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

நாலக களுவெவ
செயலாளர்
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

2025.06. 23